**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**மேட்டூர் நகராட்சி**

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 24.12.2019 ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

**மன்றப் பொருள்**

1. மேட்டூர் நகராட்சியில் வார்டு எண்.20 சவுரியம்மாள் நகரில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணிக்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 29.11.2019ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | M/s. RM and Company<br>3-6-87 Settipatti<br>Mettur (TK) | 0.35% மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | Thiru.M.Ramasamy<br>8/37, Periya Vanavasi(PO)<br>Mettur(TK) | 2.40% மதிப்பிட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.35% குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/s.RM and Company, Settipatti ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

**(ந.க.எண்.4256/2019/ இ1)**

## தீர்மான எண்.234 நாள் 24.12.2019

## அனுமதிக்கப்பட்டது

2. மேட்டூர் நகராட்சியில் குடிநீர் விநியோக பணிக்கு பிளிச்சிங் பவுடர் மற்றும் ஆலம் விநியோகம் செய்தல் பணிக்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 29.11.2019ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | M/s. Sri Kaliyamman<br>Trading Corporaiton | 0.21 சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | M/s/Tiruchengode Agro<br>Engineering service Co operative | 1.42 சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.21% குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/s.Sri Kaliyamman Trading Corporation ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

**(ந.க.எண்.330–1/2019/ இ1)**

## தீர்மான எண்.235 நாள் 24.12.2019

## அனுமதிக்கப்பட்டது

3. இந்நகராட்சியில் காமத் பூங்காவில் (சின்ன பார்க்) அலங்கார மின் விளக்கு வசதி செய்தல் பணிக்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 03.12.2019ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | KG Enter Prise<br>Devanampatti | 0.25% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | அம்மன் சோலார் பவர் சிஸ்டம் | 2.00% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.25% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு. K.G.Enter Prise, Devanampatti ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.1475/2017/ இ1)**

## தீர்மான எண்.236 நாள் 24.12.2019

## அனுமதிக்கப்பட்டது

**4.** இந்நகராட்சியில் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு டெங்கு காய்ச்சல் பரிசோதனை செய்யக்கூடிய உபகரணம் ஒன்று வாங்குதல் பணிக்கு ரூ.6.50 லட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 04.12.2019ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | Dhanvanthri Diagonostic & Surgical Distributors<br>Angammal Colony<br>Salem | 0.20% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | Jeevan Sugicals<br>Gugai<br>Salem | 2.30% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.20% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு. Dhanvanthurai

Diagonostic & Surgical Distributors, Salem ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.4025/2019/ இ1)**

## தீர்மான எண்.237 நாள் 24.12.2019

## அனுமதிக்கப்பட்டது

5. மேட்டூர் நகராட்சி தூக்கணாம்பட்டி செறிவூட்டப்பட்ட நூண் உரக்கூடத்திற்கு மேற்கு புறத்தில் உள்ள A.C SHEET கட்டிடத்திற்கு மராமத்து பனி மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 12.12.2019ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | M/S M.R&CO<br>7/124 INDHIRA NAGAR,<br>METTUR | 0.28% சதவிகிதம்<br>மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | THIRU.M.RAMASAMY<br>8/37,PERIYA VANAVASI (PO)<br>METTUR | 1.90% சதவிகிதம்<br>மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.28% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு M/S M.R&CO METTUR ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.4519/2019/ இ1)**

## தீர்மான எண்.238 நாள் 24.12.2019

## அனுமதிக்கப்பட்டது

6. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்காக 2018–ம் ஆண்டு 5 எண்ணம் LCV வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது. அவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட வாகனங்கள் அனைத்தும் ஒரு ஆண்டினை கடந்து விட்டதால், வண்டிக்கு ஆயில் சர்வீஸ், டைனமோ மற்றும் சிறுசிறு பழுதுகளை சரிசெய்ய வேண்டியுள்ளது. எனவே மேலே கண்ட 5 வாகனங்களில் உள்ள பழுதை நிவர்த்தி செய்ய அங்கீகாரம் பெறப்பட்ட நிறுவனமான எல்.ஆர்.என். சேலம் என்ற நிறுவனத்தின் மூலமாக உத்தேச மதிப்பீடு கேட்கப்பட்ட வகையில், இந்நிறுவனம் 06.12.2019–ந் தேதி ஒவ்வொரு வாகனத்திற்கு உரிய செலவின தொகையினை வழங்கியுள்ளது. அவற்றின் விவரம் கீழ்க்கண்டவாறு.

| வ.எண். | வாகனம் எண். | பழுதுகளை சரிசெய்ய வேண்டி வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | LCV TN 93/B2160 | ரூ. 3901/– |

| | | |
|---|---|---|
| 2 | LCV TN 93/B2156 | ரூ. 3901/— |
| 3 | LCV TN 93/B2135 | ரூ. 4665/— |
| 4 | LCV TN 93/B2101 | ரூ. 8933/— |
| 5 | LCV TN 93/B2151 | ரூ. 3901/— |
| | | ரூ.25301/— |

மேற்காணும் நிறுவனம் மூலம் வரப்பெற்ற பட்டியல் தொகையான ரூ.25301/—ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கல்.

2. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட 5 எண்ணம் LCV வாகனங்களுக்கு ஆயில்சர்வீஸ், கிளட்ச் பிளேட் சர்வீஸ் செய்தல், சில சில பழுதுகளை சரிசெய்யும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட எல்.ஆர்.நிறுவனம் மூலம் பெறப்பட்ட பட்டியல் தொகையான ரூ.25301/— க்குள் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ளவும், இப்பணியினை பொது மக்களின் அத்தியாவசிய பணியாக உள்ளதால், பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் பணி உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கட்டு எண்.88/2019/ எச்1)**

## தீர்மான எண்.239 நாள் 24.12.2019

## அனுமதிக்கப்பட்டது

7. மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளான பஸ் நிலையம், தினசரி வாரச்சந்தை பகுதிகள், அம்மா உணவகம், ஆடுவதை செய்யப்படும் பகுதிகள், அரசு மருத்துவமனை பகுதிகள், அரசு ஆரம்ப சுகதார நிலையப்பகுதிகள், நுண் உரக்குடில் பகுதிகள், உணவு கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரித்தல் பணி நடைபெறும் பகுதிகள், சின்ன பார்க், பெரிய பார்க், மேட்டூர் அணை மற்றும் அனைத்து பொது இடங்களிலும் கிருமி நாசினி செய்ய தேவையான சுண்ணாம்பு தூள் தேவைப்படுகின்றது. கடந்த மாதங்களுக்காக கொள்முதல் செய்யப்பட்ட நீர்த்த சுண்ணாம்பு தூள் இருப்புகள் அனைத்தும் தீர்ந்து விட்டதால், தொடர்ந்து பொது சுகாதார பணிகளை மேற்க்கொள்ள ஜனசரி 2020 முதல் மார்ச் 2020 முடிய நிலையில் உள்ள காலங்களுக்கு தேவையான சுண்ணாம்பு துாள் 12 டன், 1டன் ரூ 9000/— என ஆகும் என மதிப்பீடு ெய்யப்பட்ட வகையில் 12 டன்னுக்குரிய தொகையான ரூ 1,08,000/— ஆகும் எனவும், இதற்கான செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதாரம் நகராட்சிக்குட்ட அனைத்து பகுதிகளிலும் தினசரி கிருமிநாசினி செய்ய தேவையான நீர்த்த சுண்ணாபு தூளை ஜனவரி 2020 முதல் மார்ச் 2020 முடிய வரை காலங்களுக்கு தேவையான சுண்ணாம்பு தூளை ரூ 1,08,000/—க்குள் கொள்முதல் செய்யவும் மேற்படி தொகையினை பொது நிதியிலிருந்து செலவினம்

மேற்க்கொள்ளவும், மேற்காணும் நீர்த்த சுண்ணாம்பு தூளை கொள்முதல் செய்ய ஒப்புபந்தப்புள்ளிகள் கோரவும் மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.

**(கட்டு எண்.2205/2019/ எச்1)**

**தீர்மான எண்.240 நாள் 24.12.2019**

## அனுமதிக்கப்பட்டது

**8.** பொது சுகாதாரப்பணிகளுக்கு தேவையான தடவாள சாமான்களான சவுல்கள், 7 பல் கொண்ட சிறிய கொக்கி, 5 பல் கொண்ட சிறிய கொக்கி, அரிவாள்கள், கையுறைகள், மழைகோட்டுகள் முகவுரைகள், சாக்கடை கொக்கிகள் மரப்பிடியுடன் கடப்பறை, மண் வெட்டிகள் ஒட்டுநருக்கான ஷீக்கள், மற்றும் ஒளிரும் ஜாக்கெட்கள் போன்றவைகள் தேவைப்படுகின்றன. எனவே பொது சுகாதார பணிகளுக்கு அவசியம் தேவைப்படும் பட்சத்தில் உள்ளதா மேற்காணும் தளவாட சாமான்களை கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ 2,50,000/– ஆகும் எனவும், இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதாரப்பணிகளுக்கு தேவையான தடவாள சாமான்கள் கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகையான ரூ 2,50,000/–க்குள் செலவினம் மேற்க்கொள்ளவும், மேற்காணும் பணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதற்கு மன்றம் பரிசிலீத்து அனுமதி வழங்கலாம்.

**(கட்டு எண்.2205/2019/எச்1)**

**தீர்மான எண்.241 நாள் 24.12.2019**

## அனுமதிக்கப்பட்டது

**9.** பொதுசுகாதாரம் பூச்சிகளால் பரவக்கூடிய டெங்கு, மலேரியா, சிக்குன்குனியா போன்ற நோய்களையும், தண்ணீர் மூலம் பரவும் நோயிகளான டைபாய்டு, மஞ்சள் காய்ச்சல், காலரா போன்ற நோய்களை கட்டுப்படுத்தும் பணிக்கும், மேட்டூர் அணை 16 மதகு கதவணையின் கீழ்புறம் உள்ள பாறைகள், பள்ளங்களில் தண்ணீர் தேங்கி வெளியே செல்லாமல் கழிவுநீர் போல் உருவாகி, ஏற்பட்டுள்ள துற்நாற்றம் அந்த வழியாக செல்லும் பொதுமக்கள் மூக்கை பிடித்து கொண்டு செல்வதும், இது குறித்து பொதுமக்கள் சார்பில் சாலை மறியல்களும் நடந்த வண்ணம் உள்ளன. எனவே இப்பணிகளுக்காக கொள்முதல் செய்யப்பட்ட பிளிச்சிங் பவுடர் முழுவதும் தீர்ந்து விட்டதாலும், தொடர்ந்து மேற்காணும் பொதுசுகாதார பணிகளை மேற்கொள்ள ஜனவரி 2020 முதல் மார்ச் 2020 மூன்று மாதங்களுக்கு தேவையான பிளிச்சிங் பவுடர் 9 டன் ஒப்பந்தபுள்ளிகள் மூலம் கொள்முதல் செய்யவும் அதற்காக தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டு டன் 1–க்கு ரூ.43,000/– வீதம் 9 டன்னுக்குரிய, தொகையான ரூ.3,87,000/– ஆகும் என்பதையும்,

இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதாரம் பூச்சிகள் மற்றும் தண்ணீர் மூலம் பரவும் நோய்களான மலேரியா, சிக்குன்குனியா,டெங்கு, லெப்போபைரோசிஸ், காலரா, டைபாய்டு, மஞ்சள் காய்ச்சல் தடுப்பு பணி மற்றும் மேட்டூர் அணை 16 மதகு கதவணையில் கீழ்புறம் உள்ள பாறை இடுக்குகள், பள்ளங்கள், குளம் போல் தேங்கி நிற்கும் தண்ணீரில் ஏற்படும் துர்நாற்றத்தை கட்டுப்படுத்தும் பணிக்கும் பிளிச்சிங்பவுடர் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தற்பொழுது பிளச்சிங் பவுடர் இருப்பு இல்லாததாலும், மேற்காணும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள தேவையான பிளிச்சிங் பவுடர் ஜனவரி 2020 முதல் மார்ச் 2020 வரையிலான காலங்களுக்கு 9 டன் பிளிச்சிங் பவுடரும், அதற்காக தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டு தெகையான ரூ 3,87,000./க்குள் கொள்முதல் செய்யவும், இப்பணிக்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரவும் மன்றம் பரீசிலித்து அனுமதி வழங்கலாம்.

**(கட்டு எண்.2711/2019/எச்1)**

## தீர்மான எண்.242 நாள் 24.12.2019

## அனுமதிக்கப்பட்டது

10. மேட்டூர் நகராட்சி பொது சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் கழிவுநீர் உறிஞ்சும் வாகனம் வண்டி எண்.TN27 W0535–ல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாகனத்தை கொள்முதல் செய்யப்பட்ட நாளிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் தகுதி சான்று பெற அனைத்து பழுது பணிகள், பழுதான பொருட்களுக்கு புதிய பொருட்கள் பொருத்துதல், வயரிங், பெயிண்டிங் மற்றும் இதரப்பணிகளை மேற்கொண்டு தகுதி சான்று பெறப்பட்டு வரப்படுகின்றது. கடந்த 2019–ஆம் ஆண்டில் பெறப்பட்ட தகுதி சான்றுக்கான காலக்கெடு வருகின்ற 20.01.2020ஆம் தேதியுடன் முடிவடைகிறது. எனவே 20.01.2020க்கான காலக்கெடு முடிவுறும் நிலையில் உள்ள மேற்காணும் வாகனத்தில் உள்ள பழுது பணிகள், பழுதான பொருட்களுக்கு புதிய பொருட்கள் பொருத்துதல், வயரிங் வேலைகள், ஆயில் சர்வீஸ், பெயிண்டிங் வேலைகள் செய்தல், வானங்களில் வாசகங்கள் எழுதுதல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவின கோரப்படில் தொகையினை ரூ.1,57,050/– ஆகும். என தெரிவிக்கப்பட்டுள்ளன. எனவே மேற்காணும் வானத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்ய தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.1,57,050/– ஆகும் எனவும் இதற்காக ஆகும் செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி பொது சுகாதார பணி கழிவுநீர் உறிஞ்சும் பணிக்கு பயன்படும் வாகன எண்.TN27W0535க்கு 2019ஆம் ஆண்டுக்கான வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் பெறப்பட்ட தகுதி சான்றுக்கான காலக்கெடு 20.01.2020 முடிவுறும் நிலையில் உள்ளதால் மேற்காணும் வாகனத்திற்கு 2020ஆம் ஆண்டுக்கு தகுதிச்சான்று பெற்ற வானத்தில் உள்ள அனைத்து பழுது பணிகள், பழுதான பொருட்களுக்கு புதிய பொருள் பொருத்துதல், வயரிங், ஆயில் சர்வீஸ், மற்றும் இதர பழுது பணிகள் முடித்து பெறவும், அதற்காக

தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.1,57,050/—க்குள் செலவினம் மேற்கொள்ளவும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.

**(கட்டு எண்.4803/2019/எச்1)**

## தீர்மான எண்.243 நாள் 24.12.2019

## அனுமதிக்கப்பட்டது

11. திரு.எஸ்.வாஞ்சி த/பெ வி.சேஷன்(லேட்) வருவாய் உதவியாளர் (ஓய்வு) அவர்களுக்கு சென்னை உயர்நீதிமன்ற வழக்கு W.P.எண்.26306/2018ன் தீர்ப்பின் படி ரூ.1,52,392/— ஐ பணிக்கொடையாக வழங்கப்பட்டது. அதற்கான வட்டி 10% பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் பணிக்கொடைத் தொகைக்கு மிகாமல் வட்டி தொகையும் ரூ.1,52,392/— ஐ திரு.எஸ்.வாஞ்சி அவர்களுக்கு வழங்கப்பட்டது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற W.P.எண்.22863/2019 நாள்.05.08.2019ன்படி 15% வட்டி வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதால் மீதம் 15% வட்டி வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதால் மீதம் 5% வட்டித்தொகையை 7 தினங்களுக்குள் சேலம் தொழிலாளர் துணை ஆணையர், என்ற பெயருக்கு செலுத்த வேண்டும் என தொழிலாளர் துணை ஆணையர், சேலம் அவர்கள் தெரிவித்ததற்கிணங்க 5% வைப்பீடு செய்ய ரூ.76196/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க நடவடிக்கை எடுத்தமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.47/2010/சி1)**

## தீர்மான எண்.244 நாள் 24.12.2019

## அனுமதிக்கப்பட்டது

12. திரு.எஸ்.வாஞ்சி, வருவாய் உதவியாளர் (ஓய்வு), மேட்டூர் நகராட்சி அவர்கள் சென்னை, உயர்நீதி மன்ற வழக்கு WP.No.33548/2019ல் தான் 36 வருடங்கள் பணிபுரிந்ததாக தனக்கு ஓய்வூதியம் பெற்று தருமாறும் வழக்கு தொடர்ந்துள்ளார். 4 வார காலத்திற்குள் பதிலுறை தாக்கல் செய்யுமாறு உத்தரவு வரப்பெற்றுள்ளார். பதிலுறை தாக்கல் செய்ய ஏதுவாக திரு.லூர்து பால் மௌரியா, வழக்கறிஞர், அவர்களுக்கு ரூ.15000/— வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க நடவடிக்கை எடுத்தமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.47/2010/சி1)**

## தீர்மான எண்.245 நாள் 24.12.2019

## அனுமதிக்கப்பட்டது

**13.** மேட்டூர் நகராட்சியில் உள்ளாட்சி தேர்தல்- 2019 வாக்குச்சாவடி மையங்களில் பராமரிப்பு செய்தல் வர்ணம் பூசுதல் வாக்குச்சாவடி எண்ணிக்கை நடைபெறும் இடத்தில் மற்றும் தடுப்புகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 03.12.2019ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | திரு.கே.கோவிந்தன்<br>பூசாரிப்பட்டி (அஞ்சல்)<br>ஓமலூர் (வட்டம்)<br>சேலம் | 0.28% மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு.எம்.ராமசாமி<br>8/37, பெரிய வனவாசி<br>மேட்டூர் (வட்டம்)<br>சேலம் | 1.60% மதிப்பிட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.28% குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.கே.கோவிந்தன் பூசாரிப்பட்டி (அஞ்சல்) ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.4581/2019/ இ1)**

## தீர்மான எண்.246 நாள் 24.12.2019

## அனுமதிக்கப்பட்டது

14. மேட்டூர் நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. இரா ஆறுமுகம் அவர்கள் தனது வயதான தாய், தந்தையை அருகில் இருந்து கவனிக்க வேண்டியுள்ளதால் அருகில் உள்ள கோபி செட்டிபாளையம் நகராட்சி அல்லது பவானி நகராட்சிக்கு பணி மாறுதல் செய்து தரக் கோரியுள்ளார். மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3489/2019/சி1)**

## தீர்மான எண்.247 நாள் 24.12.2019

## அனுமதிக்கப்பட்டது

ஆணையாளர்(பொ) மற்றும் தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி.